NOVEMBER 2009

**60121/BPZ3A/ BPF3A/BPW3A**

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions, each in 30 words.

All questions carry equal marks.

1. State any two kinds of Debentures.

கடனீட்டுப் பத்திரங்களில் ஏதேனும் இருவகைகளைத் தருக.

2. What do you mean by shares?

''பங்குகள்'' என்றால் என்ன பொருள்?

3. Give journal entry for debenture issued at par redeemable at premium.

கடன் பத்திரத்தை முகமதிப்பில் வெளியீட்டு முனைமத்தில் திருப்பி தருவதற்கு குறிப்பு ஏட்டில் பதிவு தருக.

4. In which type of shares, shareholders has priority in getting dividends?

பங்குதாரர்களுக்கு பங்காதாயம் பெறுவதில் முன்னுரிமை பெற்ற பங்குகளின் பெயர் யாது?

5. How to calculate Super Profit?

மிகை இலாபம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

6. What do you mean by profits prior to incorporation?

கூட்டுறுவாக்கத்திற்கு முந்தைய இலாபம் என்றால் என்ன பொருள்?

7. A company forfeited 10 shares of Rs. 10 each issued for non-payment of the final call of Rs. 3 per share. Give entry for forfeiture.

ஒரு நிறுமம் ரூ. 10 மதிப்புள்ள 10 பங்குகளில் இறுதி அழைப்பான ரூ. 3 செலுத்தாமையானால் பறிமுதல் செய்தது. பங்குகளை பறிமுதல் செய்தமைக்கு குறிப்பில் பதிவு செய்க.

8. B Ltd. issued 2000, 6% debentures of Rs. 50 each. Give journal entry if the debentures are issued at par and redeemable at par.

B லிட் 2,000, 6% கடன் பத்திரங்களை ரூ. 50 வீதம் வெளியிட்டது. கடன்பத்திரங்களை முகமதிப்பில் வெளியீட்டு முகமதிப்பில் மீட்பு செய்தால். கீழ்க்கண்ட நடவடிக்கைக்கு குறிப்பேடு தருக.

9. Ganesh Ltd. was incorporated on 1.4.2008 which took over the business of Siva with effect from 1.1.2008. The sales for the period upto 1.4.2008 was Rs. 2,50,000 and there after upto 31.12.2008 was Rs. 3,50,000. Calculate sales ratio.

கணேஷ் லிட் 1.4.2008 ல் பதிவு செய்யப்பட்டு சிவா நிறுமத்தை 1.1.2008 லிருந்து எடுத்துக்கொண்டது. 1.1.2008 முதல் 1.4.2008 வரை விற்பனை 2,50,000 மும் அதன் பின் 31.12.2008 வரை விற்பனை ரூ. 3,50,000 மும் இருந்தது. விற்பனை விகிதத்தை கணக்கிடுக.

10. Normal profit – Rs. 20,000.

Average profit – Rs. 30,000.

Normal rate – 10%.

Calculate goodwill under capitalization method.

சாதாரண இலாபம் – ரூ. 20,000.

சராசரி இலாபம் – ரூ. 30,000.

சாதாரண இலாப விகிதம் – 10%.

நற்பெயரை முதலாக்க முறையில் கணக்கிடுக.

11. X Ltd. has 1,00,000 equity shares of Rs. 10 each fully paid up decides to reduce them into Rs. 2 per share. Journalize.

X நிறுமம் தன் 1,00,000 சாதர்ரண பங்குகள் ரூ. 10 முழுமதிப்பில் உள்ளதை பங்கு ஒன்றுக்கு ரூ. 2 வரை குறைக்க முடிவெடுத்தது. குறிப்பேட்டு பதிவு தருக.

12.

| | Rs. |
|---|---|
| 2000, 12% redeemable preference shares of Rs. 100 each fully called | 2,00,000 |
| Less : Calls in arrears | 2,000 |
| | 1,98,000 |

Calculate preference dividend.

| | ரூ. |
|---|---|
| 2000, 12% மீள்தகு முன்னுரிமை பங்குகள் ரூ. 100 வீதம் முழுவதும் அழைக்கப்பட்டது | 2,00,000 |
| கழி : அழைப்பு பாக்கி | 2,000 |
| | 1,98,000 |

முன்னுரிமை பங்குகளின் பங்காதயத்தை கணக்கிடுக.

PART B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions, each in 200 words.

All questions carry equal marks.

13. What are the divisions of share capital?

பங்கு மூலதனத்தின் பிரிவுகள் யாவை?

14. A company issued 10,000 equity share capital of Rs. 100 each. Amount payable on application Rs. 20. On allotment Rs. 40 and on first and final call Rs. 40. All money due for shares were received. Pass journal entries.

A நிறுமம் 10,000 சாதாரண பங்குகளை பங்கு ஒன்றுக்கு ரூ. 100 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் பொழுது ரூ. 20 ம், ஒதுக்கீட்டின் மேல் ரூ. 40ம், முதல் மற்றும் கடைசி அழைப்பின் பேரில் ரூ. 40 ம் செலுத்தப்பட்டது. அனைத்து பணங்களும் முழுவதுமாக பெறப்பட்டது. முதற்குறிப்பு வரைக.

15. From the following details of ABC Company Ltd. prepare Profit and Loss Appropriation A/c for the year ended 31.3.2008.

| | Rs. |
|---|---|
| P/L a/c on 1.4.2007 (Cr.) | 67,000 |
| Proposed dividend | 60,000 |
| Net profit 2007 – 2008 | 1,33,000 |
| Sundry creditors | 19,000 |
| Transfer to general reserve | 55,500 |

கீழ்க்கண்ட விபரங்களிலிருந்து ABC நிறுமத்தின் இலாப நஷ்ட ஒதுக்கீட்டு கணக்கை 31.3.2008 முடிய தயாரிக்கவும்.

| | ரூ. |
|---|---|
| இலாபநஷ்ட கணக்கு 1.4.2007 (வ) | 67,000 |
| முன்மொழி பங்காதாய கணக்கு | 60,000 |
| 2007 – 2008ல் நிகர இலாபம் | 1,33,000 |
| பற்பல கடனீந்தோர் | 19,000 |
| பொது காப்பீற்கு மாற்றியது | 55,500 |

16. From the following information, calculate the value per equity share :

| | Rs. |
|---|---|
| 2000, 9% preference shares of Rs. 100 each, fully paid | 2,00,000 |
| 50,000 equity shares of Rs. 10 each, Rs. 8 per share paid up | 4,00,000 |
| Expected profit before tax | 2,18,000 |
| Rate of tax | 50% |
| Transfer to general reserve every year | 20% of the profit |
| Normal rate of earnings | 15% |

| | ரூ. |
|---|---|
| 2000, 9% முன்னுரிமை பங்குகள் ரூ. 100 வீதம் முழுவதும் செலுத்தப்பட்டது | 2,00,000 |
| 50,000 சாதாரண பங்குகள் ரூ. 10 வீதம் செலுத்தியது ரூ. 8 | 4,00,000 |
| வரிக்கு முன்பாக எதிர்பார்க்கும் இலாபம் | 2,18,000 |
| வரிவிகிதம் | 50% |
| ஒவ்வொரு ஆண்டும் பொதுகாப்பிற்கு மாற்றுவது | 20% இலாபத்தில் |
| பொதுவருவாய் ஈட்டு விகிதம் | 15% |

மேற்காணும் விபரங்களிலிருந்து சாதாரண பங்கின் மதிப்பை கணக்கிடுக.

17. Balance Sheet of Lucky Ltd., as 31.3.2008 as follows :

| | Rs. | | Rs. |
|---|---|---|---|
| 2,00,000 Equity shares of | | Goodwill | 5,00;000 |
| Rs. 10 each | 20,00,000 | Machinery | 17,00,000 |
| Creditors | 15,00,000 | Stock | 8,00,000 |

| | Rs. | | Rs. |
|---|---|---|---|
| | | Debtors | 3,00,000 |
| | | Cash | 10,000 |
| | | P & L a/c | 1,90,000 |
| | 35,00,000 | | 35,00,000 |

The following scheme of reconstruction was approved by court :

(a) To reduce equity share capital by Rs. 5 per share.

(b) To write off goodwill, preliminary expenses and P/L a/c.

(c) To write down machinery by Rs. 3,10,000.

Give journal entries and balance sheet.

லக்கி நிறுமத்தின் 31.3.2008 முடிவுற்ற ஆண்டின் இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு :

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| 2,00,000 சாதாரண பங்குகள் | | நன்மதிப்பு | 5,00,000 |
| ரூ. 10 வீதம் | 20,00,000 | இயந்திரம் | 17,00,000 |
| கடனீந்தோர் | 15,00,000 | சரக்கு | 8,00,000 |
| | | கடனாளிகள் | 3,00,000 |
| | | ரொக்கம் | 10,000 |
| | | இலாப நட்ட க/கு | 1,90,000 |
| | 35,00,000 | | 35,00,000 |

கீழ்க்கண்ட அகச்சீரமைப்பு நீதிமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(அ) சாதாரண பங்கு முதல் ரூ. 5 ஆக குறைக்கப்பட்டது.

(ஆ) நன்மதிப்பு, தொடக்கசெலவு மற்றும் இலாபநட்ட க/கு நீக்கப்பட்டது.

(இ) இயந்திரம் ரூ. 3,10,000 குறைக்கப்பட்டது.

குறிப்பேடு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

18. State the legal provisions as to the redemption of preference shares.

முன்னுரிமைப் பங்குகளை மீட்பு செய்வதற்கான சட்ட விதி முறைகளை கூறவும்.

19. Siva Limited was incorporated on 1.7.2008 which took over the business of Murugan with effect from 1.1.2008. The sales for the period upto 30.6.2008 was Rs. 2,50,000 and thereafter upto 31.12.2008 was Rs. 3,50,000. Gross profit for the year ended 31.12.2008 was Rs. 1,80,000. The expenses debited to P/L a/c were as follows :

Salary Rs. 15,000; Rent Rs. 9,000; Director fees Rs. 13,000; Discount on sales Rs. 6,000; Interest on debentures Rs. 6,000; Bad debts Rs. 4,800.

Ascertain the profit prior to and after incorporation.

சிவா லிமிடெட் 1.7.2008 ல் பதிவு செய்யப்பட்டு முருகன் நிறுமத்தை 1.1.2008 லிருந்து எடுத்துக் கொண்டது.

30.6.2008 வரை விற்பனை ரூ. 2,50,000 மும், அதன் பின் 31.12.2008 வரை விற்பனை ரூ. 3,50,000 மும் இருந்தது. 31.12.2008 முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபம் ரூ. 1,80,000; இலாப நட்ட கணக்கில் பற்று எழுதப்பட்ட செலவினங்கள் பின்வருமாறு :

சம்பளம் ரூ. 15,000; வாடகை ரூ. 9,000; இயக்குநர் கட்டணம் ரூ. 13,000; விற்பனை மீதான கழிவு ரூ. 6,000; கடனீட்டு பத்திரங்கள் மீது வட்டி ரூ. 6,000; வாராக்கடன் ரூ. 4,800.

கூட்டுறுவாக்கத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய இலாபத்தை கணக்கிடுக.

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

All questions carry equal marks.

20. Murugan Company Ltd., make an issue of 1000 shares of Rs. 100 each payable as :

Rs. 20 on application.

Rs. 40 on allotment.

Rs. 40 on calls.

All the shares except 100 are subscribed and amount duly received. These 100 shares are forfeited due to non-payment of call money. Subsequently these shares were reissued at Rs. 70 per share and the amount were received.

Pass journal entries.

முருகன் நிறுமம் ஒவ்வொன்றும் ரூ. 100 மதிப்பிலான 1,000 சாதாரண பங்குகளை பின்வருமாறு வெளியிடுகிறது.

விண்ணப்பிக்கும் போது ரூ. 20

ஒதுக்கீட்டின் போது ரூ. 40

அழைப்பின் போது ரூ. 40

100 பங்குகள் தவிர அனைத்து பங்குகளும் ஒத்துக் கொள்ளப்பட்டு அதற்கான தொகையும் பெறப்பட்டன. இந்த பங்குகளுக்கு (100) அழைப்பு பணம் வராததால் ஒறுப்பிழைப்பு செய்யப்பட்டு மீண்டும் ரூ. 70 க்கு மறு வெளியீடு செய்யப்பட்டது. அதற்குரிய பணமும் பெறப்பட்டது.

தேவையான குறிப்பேடுகளை தருக.

21. ABC Company decide to redeem 10,000, 5% preference shares of Rs. 100 each at a premium of 10%. For that they have issued 80,000 equity shares of Rs. 10 each, payable at Rs. 12 per share. The company has also balance of Rs. 1,10,000 on P/L a/c and Rs. 90,000 as reserve fund.

Pass journal entries.

ABC நிறுமத்தின் 10,000, 5% முன்னுரிமை பங்குகள் ரூ. 100 வீதம் இருப்பதை மீட்பு செய்வதாக முடிவு மேற்கொண்டு, 10% முனைமத்தில் மீட்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக 80,000 சாதாரண பங்குகள் ரூ. 10 வீதம் ரூ. 12 முனைமத்தில் வெளியிட்டது. நிறுவன இலாப நட்ட க/கு (வரவு) இருப்பு ரூ. 1,10,000 மற்றும் காப்பு நிதி ரூ. 90,000 இருந்தது. தேவையான குறிப்பேடுகளை தருக.

22. From the following balances, prepare the Balance Sheet of a company in the prescribed format :

| | Rs. | | Rs. |
|---|---|---|---|
| Goodwill | 1,50,000 | Investments | 2,00,000 |
| Share capital | 5,00,000 | Debentures | 2,50,000 |
| Other fixed assets | 4,70,000 | P/L a/c | 25,000 |
| Reserves | 1,10,000 | Stock | 80,000 |
| Share premium | 15,000 | Debtors | 55,000 |
| Preliminary expenses | 15,000 | Bank balance | 30,000 |
| Unsecured loans | 65,000 | Creditors | 35,000 |

கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு ஒரு நிறுமத்தின் இருப்பு நிலைக் குறிப்பை உரிய படிவத்தில் தயார் செய்க.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| நன்மதிப்பு | 1,50,000 | முதலீடுகள் | 2,00,000 |
| பங்குமுதல் | 5,00,000 | கடனீட்டு பத்திரங்கள் | 2,50,000 |
| பிறநிலைச் சொத்துக்கள் | 4,70,000 | இலாப நட்ட க/கு (வரவு) | 25,000 |
| காப்பு | 1,10,000 | சரக்கிருப்பு | 80,000 |
| பங்கு முனைமம் | 15,000 | கடனாளிகள் | 55,000 |
| தொடக்க செலவுகள் | 15,000 | வங்கி இருப்பு | 30,000 |
| பிணையற்ற கடன் | 65,000 | கடனீந்தோர் | 35,000 |

23. The Balance Sheet of Kanchana Industries Ltd. as on 31.3.2008 was as follows :

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Share capital : | | Goodwill | 15,000 |
| 2000, Preference shares of Rs. 100 each | 2,00,000 | Freehold properties | 2,00,000 |
| | | Plant & Machinery | 3,00,000 |
| 4000 Equity shares of Rs. 100 each | 4,00,000 | Stock | 50,000 |
| | | Debtors | 40,000 |
| 5% Debentures | 1,00,000 | P & L a/c | 2,45,000 |
| Bank overdraft | 50,000 | | |
| Creditors | 1,00,000 | | |
| | 8,50,000 | | 8,50,000 |

The company got the following scheme of capital reduction approved by the court.

(a) The preference shares to be reduced at Rs. 75 per share, fully paid and the equity shares to Rs. 37.50.

(b) The debenture holders took over the stock and book debts in full satisfaction of the amount due to them.

(c) The goodwill a/c is to be eliminated.

(d) The freehold properties to be depreciated by 50%.

(e) The value of the Plant and Machinery to be increased by Rs. 50,000.

Give journal entries for the above and prepare revised balance sheet.

31.3.2008 நாளைய காஞ்சனா தொழிற்சாலையின் இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| 2,000 முன்னுரிமை பங்குகள் | | நன்மதிப்பு | 15,000 |
| ரூ. 100 வீதம் | 2,00,000 | வில்லங்கமல்லா சொத்து | 2,00,000 |
| 4000 சாதாரண பங்கின் | | பொறி மற்றும் இயந்திரம் | 3,00,000 |
| ரூ. 100 வீதம் | 4,00,000 | சரக்கிருப்பு | 50,000 |
| 5% கடன் பத்திரங்கள் | 1,00,000 | கடனாளிகள் | 40,000 |
| வங்கி மேல் வரைப்பற்று | 50,000 | இலாப நட்ட க/கு | 2,45,000 |
| கடனீந்தோர்கள் | 1,00,000 | | |
| | 8,50,000 | | 8,50,000 |

முதல் குறைப்பிற்கு நீதிமன்ற அனுமதியை இந்நிறுமம் கீழ்க்கண்டவாறு கடைபிடிக்க பெற்றது.

(அ) முன்னுரிமைப் பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 75 க்கும், சாதாரண பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 37.50 க்கும் குறைக்கப்பட்டன.

(ஆ) கடன் பத்திரதாரர்கள் சரக்கிருப்பு, மற்றும் ஏட்டுக் கடன்களை எடுத்துக் கொண்டு அவர்களது தொகையை முழுவதுமாக சரி செய்து கொண்டனர்.

(இ) நன்மதிப்பை நீக்கப்பட வேண்டும்.

(ஈ) வில்லங்கமில்லா சொத்து 50% தேய்மானத்திற்கு உள்ளாகிறது.

(உ) பொறி மற்றும் எந்திரத்தின் மதிப்பை ரூ. 50,000 உயர்த்த வேண்டும்.

மேற்கூறியவைகளுக்கான குறிப்பேட்டு பதிவுகள் மற்றும் திருத்தி அமைத்த இருப்பு நிலைக் குறிப்பை தயாரிக்க.

24. Mr. Karthik has invested Rs. 4,00,000 in a business. His net profit before tax at 50% is Rs. 1,60,000 which includes Rs. 12,000 annual rent of own building (not charged) used as business premises and Rs. 24,000 as his salary (not charged) since he has resigned from a job, the salary of which was Rs. 2,000 per month. Before starting this business he had invested this amount on 10% securities fair compensation for the risk involved is 2%. Calculate the value of goodwill on the basis of three years purchase of the average annual super profits.

திரு. கார்த்திக் ரூ. 4,00,000 வியாபாரத்தில் முதலீடு செய்துள்ளார். 50% வரி கழிக்கும் முன் அவரது ஆண்டு சராசரி இலாபம் ரூ. 1,60,000. இத்தொகையில் அவர் தனது வியாபாரதனமாக உபயோகிக்கும் சொந்த கட்டிடத்திற்கான வாடகை ஆண்டுக்கு ரூ. 12,000 மற்றும் தனது சம்பளமாக ஆண்டுக்கு ரூ. 24,000 ஆகியவை கழிக்கப்படவில்லை. இச்சொந்த வியாபாரம் தொடங்கிட ரூ. 2,000 சம்பளம் கிடைத்த ஒரு வேலையிலிருந்து விலகியுள்ளார். இந்த வியாபாரம் தொடங்குவதற்கு முன் முதல் தொகை 10% பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டு இருந்தது. இவ்வியாபாரத்திற்கான இடர்பாடுகளுக்கு 2% அதிக ஆதாயம் சேர்க்கப்படலாம். மிகை இலாபத்தின் மூன்றாண்டு சராசரி கொள்முதல் அடிப்படையில் நற்பெயரை கணக்கிடுக.

———————